இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 06-11-2024

இஸ்ரேல் நிறுத்திக் கொள்ள வேண்டும்!

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் கொத்தாக மனித உயிர்கள் கொல்லப்படுவது தொடர்ந்து கொண்டே இருப்பது துயரமானது. கடந்த ஓராண்டாக போர் விடாமல் தொடர்ந்து வருகிறது. அந்தப் போரைத் தடுக்கும் செயலை உலகநாடுகள் அக்கறையுடன் செய்வ தாகத் தெரியவில்லை. 'அவுங்களைத் திருத்த முடியாது' என்று அனைத்து நாடுகளும் கருதுவதாகவே நினைக்கத் தோன்றுகிறது.

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிர் இழந்த வர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்தைத் தாண்டி உள்ளது. கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்று வரும் தாக்குதலில் இத்தனை ஆயிரம் பேர் உயிரிழந்ததாகவும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்ததாகவும் காசா சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் 17 ஆயிரம் பேர் குழந்தைகள். 11 ஆயிரம் பேர் பெண்கள். 26 ஆயிரம் குழந்தைகள் தங்கள் பெற் றோரை இழந்துள்ளார்கள்.

175 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 125 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அனைத்து பல்கலைக் கழகங் களும் சிதைந்துள்ளன. மசூதிகளும் தேவாலயங்களும் சிதைந்துள்ளன. வாழும் இடங்களில் வாழ முடியாமல் இடம்பெயர்ந்துள்ளார்கள் மக்கள். காசாவில் இடிந்துபோன வீடுகளைக் கட்டுவதற்கே 40 ஆண்டுகள் ஆகலாம் என்று அந்நாட்டு பத்திரிக்கைகள் எழுதுகின்றன. காசா வின் அனைத்துக் கட்டமைப்புகளின் கால் பங்கு அழிக்கப்பட்டதாக ஐ.நா. அறிக்கை சொல்கிறது. 66 விழுக்காடு வீடுகள் இடிந்து போய் விட்டன. அங்கிருக்கும் அனைத்து மக்களும் வறுமையில் இருக்கி றார்கள் என்று சொல்கிறது ஐ.நா. அறிக்கை. கடந்த 15 ஆண்டுகளாக மெல்ல மெல்ல ஏற்றம் கண்டு வந்த காசாவின் பெரும்பகுதி ஓராண்டு காலத்துக்குள் அழிக்கப்பட்டு விட்டது. இந்த சோகங்கள் அனைத்தும் உலகநாடுகளால் உணரப்பட்டதாகத் தெரியவில்லை.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு வாதத்துக்கு எதிராக பாலஸ்தீனம் போராடி வருகிறது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கொள்கையானது, இரு நாட்டுப் போர் என்பதைத் தாண்டி குறிப்பிட்ட பிரதேசத்தில் நடக் கும் யுத்தமாக மாறி வருகிறது. காசா, லெபனான் ஆகிய நாடுகளின் மீது போர் தொடுத்து வருகிறது இஸ்ரேல். எனவே அதனை இரு நாட்டுச் சண்டையாகக் கருதி ஒதுக்கவோ, கண்டும் காணாமல் இருக்கவோ முடியாது.

ஈரான் ஆதரவு பெற்ற ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதியன்று தாக்குதல் நடத்தினார் கள். இதைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக் கும் போர் நடைபெற்று வருகிறது. ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக ஈரான் ஆதரவு பெற்ற லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினரும் இஸ்ரேல் ராணுவ நிலைகளின் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே இரண்டு படுகொலைகள் நடந்துள்ளன. ஈரான் வந் திருந்த ஹிஸ்புல்லா தலைவர் இஸ்மாயில் ஹனீயேவை, இஸ்ரேல் உளவுப்பிரிவு கடந்த ஜூலை 31 ஆம் தேதி கொலை செய்துள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹஸன் நஸ்ரல் லெபனா னில் வைத்து கடந்த அக்டோபர் மாதம் 27 ஆம் தேதி கொலை செய் யப்பட்டார். இதற்கும் இஸ்ரேல் பின்னணி உள்ளதாகச் சொல்லப்படு கிறது. ஈரான் மீது வான்வெளி தாக்குதலை நடத்தி ஈரான் வீரர்கள் நால்வரைக் கொலை செய்துள்ளது இஸ்ரேல். இதனால் கோபம் கொண்ட ஈரான், கடந்த 1 ஆம் தேதியன்று இஸ்ரேல் ராணுவ நிலைகளைக் குறி வைத்து தாக்குதலைத் தொடங்கியது. அதிநவீன ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருகிறது ஈரான்.

"எங்களின் ராணுவ நிலைகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத் திய இஸ்ரேலுக்கு மிகக் கடுமையான பதிலடி தரப்படும்" என்று ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா கமேனி சொல்லி இருக்கி றார். அந்த நாட்டின் அதிக ஆட்சியதிகாரம் படைத்தவர் அவர்தான். **"ஈரான் தேசத்தின் மீதும், ஆக்கிரமிப்புக்கு எதிரான ஈரான் ஆதரவு போராளிகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தும் நாடுகளுக்கு கடுமையான பதிலடி தரப்படும். இது யூத ஆக்கிரமிப்புவாத அரசுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் பொருந்தும்"** என்றும் அவர் சொல்லி இருக்கிறார். இது எங்கு போய் முடியுமோ எனத் தெரியவில்லை.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சில நாட்களுக்கு முன்னதாக அரபு நாடுகளுக்கு ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார். இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பேசிய அவர், மத்திய கிழக்கில் அமைதியை ஏற் படுத்த விரும்புவதாகவும், அரபு நாடுகளுடன் இணைந்து சமாதான மாகப் போக விரும்புவதாகவும் சொல்லி இருக்கிறார். **"இங்குள்ள அரபு நாடுகளுடன் சமாதானம் அடைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஆபிரகாம் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு இருந்தேன். அந்த செயல்முறையை மீண்டும் தொடர விரும்புகிறேன்" என்று சொல்லி இருக்கிறார். இது உண்மையாகச் சொன்னதாக இருந்தால் செயலில் காட்ட வேண்டியது அவர்தானே தவிர வேறு யாருமல்ல.**

காசாவிலும் லெபனானிலும் பதற்றம் குறைக்கப்பட வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும். இஸ்ரேலுக்குச் செய்யும் உதவிகளை மற்ற நாடுகள் நிறுத்த வேண்டும். இதனை ராஜதந்திரமாக அல்ல, அசிங்க மாகப் பார்க்க வேண்டும்.

அனைத்துக்கும் மேலாக மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டு அதிபர்களின் ஈகோவை விட மக்களின் உயிரே முக்கியம். 'எந்த இன மக்கள்' என்பதில் வேறுபாடு இல்லை. எல்லா உயிரும் ஒன்று என்று எண்ணிச் செயல்பட வேண்டும்.

●●

ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஊராட்சிப் பகுதிகளில்

ரூ. 144.68 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள்!

அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

ஈரோடு, நவ. 6 - ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கவுண்டிச்சிபாளையம், புங்கம்பாடி, வடமுகம் வெள்ளோடு மற்றும் குமாரவலசு ஊராட்சிப் பகுதிகளில் 03.11.2024 அன்று வீட்டு வசதி மற் றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்து சாமி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 முடிவுற்ற தி ட் ட ப் ப ணி க ளை திறந்து வைத்து, ரூ.144.68 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணி களை துவக்கி வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் , அமைச்சர் சு.முத்துசாமி சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், கவுண்டிச்சி பாளையம் ஊராட்சி, வள்ளி புரத்தான்பாளை யத்தில் ஒன்றிய பொதுநி தியிலிருந்து ரூ.2.00 இலட் சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நிழற்குடை யினையும், ராசாம்பாளை யம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழு நேர நியாயவிலை கடை யாக மாற்றியும், புதுவ லசு பகுதியில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதி நேர புதிய நியாயவிலைக் கடையினையும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தொடர்ந்து, அதேப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8.47 இலட்சம் மதிப் பீட்டில் வி.பி.ஏ. நகர் மெயின் சாலையை பலப் படுத்துதல் பணியினை யும், ரூ.9.86 இலட்சம் மதிப்பீட்டில் கரட்டுப்பா ளையம் முதல் அண்ண மார் கோவில் சாலை வரை சாலையை பலப் படுத்துதல் பணியினையும், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி, லட்சுமணன் வீடு முதல் சென்னிமலை பிரதான சாலை வரை ரூ.7.71 இலட்சம் மதிப் பீட்டில் புதிய வடிகால் அமைக்கும் பணியினை யும், ரூ.8.11 இலட்சம் மதிப்பீட்டில் பொட்டு சாமி விநாயகர் கோவில் வீதியில் புதிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி யினையும், 15வது நிதிக் குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் சி.எஸ்.ஐ. காலனியில் புதிய கழிப் பிடம் அமைக்கும் பணி யினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.5.48 இலட்சம் மதிப் பீட்டில் தாசநாயக்கன்பா ளையம் பிரகாஷ் மளிகை கடை முதல் ஏற்கனவே உள்ள வடிகால் வரை வடிகால் அமைக்கும் பணி யினையும், கவுண்டிச்சி பாளையம் ஊராட்சி (ராசாம்பாளையம்) ரூ.5.00 இலட்சம் மதிப் பீட்டில் மெயின்சாலை முதல் தங்கராஜ் வீடு வரையும், ரூ.5.00 இலட் சம் மதிப்பீட்டில் துரை சாமி வீடு முதல் பொன் னுசாமி வீடு வரையும், ஊராட்சி பொது நிதியிலி ருந்து ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் கருப்பன சாமி வீடு முதல் துரை சாமி வீடு வரையும், ரூ.5.00 இலட்சம் மதிப் பீட்டில் மாரப்பன் வீடு முதல் சாந்தாமணி வீடு வரையும், ரூ.5.00 இலட் சம் மதிப்பீட்டில் கேவிந் தசாமி வீடு முதல் நாச்சி முத்து வீடு வரையும் தலா 80 மீ. நீளத்திற்கு புதிய கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளையும், புங்கம் பாடி ஊராட்சி நத்தக் காட்டுப்பாளையத்தில் ரூ.4.20 இலட்சம் மதிப் பீட்டில் விநாயகர் கோவில் முதல் லோகநாதன் வீடு வரை வடிகால் அமைக் கும் பணியினையும், ரூ.4.49 இலட்சம் மதிப் பீட்டில் பழனிச்சாமி மளிகை கடை முதல் சக்திவேல் வீடு வரையும், ரூ.5.62 இலட்சம் மதிப் பீட்டில் தேவாளிப்பாறை பிரதான சாலை முதல் திருப்பதி வீடு வரையும் புதிய கான்கிரீட் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி களுக்கும், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி யில் ரூ.6.85 இலட்சம் மதிப்பீட்டில் வளர்மதி வீடு முதல் விஜய் நர்சரி பள்ளி வரை சாலை மேம் பாடு செய்யும் பணியி னையும், ரூ.12.50 இலட் சம் மதிப்பீட்டில் சிந்து வீடு முதல் விஜய் நர்சரி பள்ளி வரை வடிகால் அமைக்கும் பணியினை யும், குமாரவலசு ஊராட் சியில் ரூ.12.94 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவன் காட்டுவலசு கருக்கண்ண மார் கோவில் வி.எஸ்.கதி ரேசன் வீடு முதல் ஏற்க னவே உள்ள வடிகால் வரை வடிகால் அமைக் கும் பணியினையும், ரூ.4.89 இலட்சம் மதிப் பீட்டில் வெள்ளோடு - அவல்பூந்துறை மெயின் சாலை முதல் குமாரவலசு பள்ளி வரை சாலை மேம் பாடு செய்யும் பணி யினையும், ரூ.6.24 இலட்சம்; மதிப்பீட்டில் ரா சா ம் பா ளை ய ம் மெயின் சாலை முதல் தேவராஜ் வீடு வரை வடி காலுடன் கூடிய சாலை மேம்பாடு செய்யும் பணி யினையும், ரூ.8.06 இலட் சம் மதிப்பீட்டில் ராக் சாம்பாளையம் ஜோதி டர் விஸ்வநாதன வீடு முதல் மாகாளியம்மன் கோவில் முன்புறம் மேட் டுக்கடை சாலை வரை மேம்பாடு செய்யும் பணி யினையும், ரூ.5.06 இலட் சம் மதிப்பீட்டில் அண் ணமார் நகர் இரண்டா வது வீதியில் வடிகால் அமைக்கும் பணியினை யும் என மொத்தம் ரூ.144.68 இலட்சம் மதிப் பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் மாவட்ட ஆட்சித்தலை வர் ராஜகோபால் சுன் கரா, ஈரோடு நாடாளு மன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், கூடுதல் ஆட்சி யர் (வளர்ச்சி) ரெ.சதீஸ், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் தி ரு ம தி . க ா ய த் ரி இளங்கோ, சென்னி மலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாஸ்கர் பாபு, பாலு, பெருந்துறை வட்டாட்சியர் செந்தில் குமார் உட்பட தொடர் புடைய துறை அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சூரியம்பாளையம் பகுதியில் சாதனை விளக்க பொதுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் மாநகரச் செயலாளர் மு.சுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழகத் துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், தலைமைக் கழகப் பேச்சாளர் நாமக்கல் ம.மோகநிதி, அயுப் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டுக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

திருமயத்தில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

புதுக்கோட்டை, நவ. 6 - புதுக்கோட்டை மாவட் டம் திருமயம் வடக்கு, தெற்கு ஒன்றியம் சார்பில் பாக முகவர்கள் கலந்தாய்வு மற்றும் ஆலோசனைக் கூட் டம் திருமயத்தில் நடை பெற்றது. முன்னதாக திரும யம் வடக்கு ஒன்றியம் சார்பில் நற்சாந்துபட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பாக முகவர் கள் கூட்டம் வடக்கு ஒன் றியச் செயலாளர் இரா. கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தெற்கு ஒன்றியம் சார்பில் திருமயம் திமுக அலுவலகத் தில் ஒன்றிய செயலாளர் அழகு சிதம்பரம் தலைமை யில் நடைபெற்றது. கூட் டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் எஸ்.ரகுபதி எதிர்வரும் 2026ம் ஆண்டு நடைபெ றும் சட்டமன்றத் தேர்த லில் முதலமைச்சர் தளபதி, துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் ஆகியோரின் சிறப்பான ஆட்சி தொடர கட்சி நிர்வாகிகள் ஒத்து ழைப்பு அளிக்க வேண்டும். எனவே பாக முகவர்கள் அடுத்த சட்டமன்றத் தேர்த லில் தி.மு.க. வெற்றி பெற வியூகங்களை வகுக்க வேண் டும். மேலும் பாக முகவர் கள் நினைத்தால் தான் தி.மு.க. அதிக வாக்குகளை பெற முடியும் என தெரிவித் தார்.

இதனைத் தொடர்ந்து திருமயம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான ராஜா உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் இரா.மேக நாதன், பொறியாளர் கே. ஆர்.ராமசாமி, மாவட்டப் பிரதிநிதிகள் சுப.துரை ராஜா, சீமானூர் கணேசன், முல்லை ரமேஷ், டாக்டர் ராஜசேகர பாண்டியன், அருண் சேகர், தொண்ட ரணி சாமி சுரேஷ், ஆறுமு கம், இன்ஜினியர் ஆறுமு கம், ஒன்றிய நிர்வாகிகள் குமார், நீலமேகம் உள் ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அந்துமணி சிந்துமணி

அந்துமணி : ஏண்டி சிந்து; தொடர்ந்து தனக்கு அலுவலக ரீதியாக, ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் ரவ்நீத்சிங் பிட்டு, இந்தியிலேயே அனுப்பும் பதில் கடிதங்களினால் கோப முற்ற கேரளத்தைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ், மலையாள மொழியிலேயே அந்த ஒன்றிய அமைச்சருக்கு விளக்கமாகக் கடிதம் அனுப்பி இருக்கிறாரே ?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; அந்த ஒன்றிய அமைச்சருக்கு மலையாள மொழி நிச்சயம் தெரிந்திருக்காது; ஜான் பிரிட்டாஸ் அனுப்பிய கடிதம் என்னவென்று புரிந்திருக்காது.

1963, இந்திய அலுவலக மொழிகள் சட்டம்,அலுவலக ரீதியாக ஆங்கிலத்தையும் கட்டாயம் பயன்படுத்திட வேண்டும் என்று கட்டளை இட்டுள்ளது. இதைப் புரிந்தோ, புரிந்து கொள்ளாமலோ, ஒன்றிய அமைச்சர் தனக்குள்ள இந்தி வெறியை கேரள எம்.பி.யிடம் கொட்டி இருக்கிறார். அதைத்தான் அவர் சட்ட ரீதியாகத் தட்டிக் கேட்டிருக்கிறார்.

ஒரே நாடு, ஒரே மொழி - என்ற ஒன்றிய பா.ஜ.க.வின் இந்தி மொழி வெறித் திட்டம் குழப்பத்திலும் கும்இருட்டிலும்தான் போய் முடியும்.

இருட்டினில் நீதி மறைந்து விடுமா ?